இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 20.02.2026

# மண் செழிக்க... மக்கள் மகிழ...

மண் செழிக்க ... மக்கள் மகிழ... வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்.

'திராவிட மாடல்' ஆட்சி அமைந்ததும் வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையை வெளியிட உத்தரவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதன் மூலமாக பல்வேறு திட்டங்கள் வேளாண்மை - உழவர் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டதால் தமிழ்நாடானது வேளாண்மையில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்த திட்டங்கள் அனைத்தும் உழவர்களின் ஆலோசனைப்படி தீட்டப்பட்டவை ஆகும்.

இதுவரை வேளாண்மை நிதிநிலை அறிக்கையை 5 முறை தாக்கல் செய்துள்ளார் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் இதுவரை 28 கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் கலந்து கொண்ட உழவர்கள், அவர்களின் சங்கங்கள் சொன்ன ஆலோசனைகள்தான் திட்டங்களாகப் போடப்பட்டன.

**வேளாண்மைத் துறையை நவீனமயமாக்குதல், உழவர்களின் வருமானத்தை உயர்த்துதல், வேளாண்மையில் உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகிய இலக்குகளை தமிழ்நாடு அடைந்துள்ளது.**

கடந்த ஐந்து ஆண்டுகளில் வேளாண் நிதிநிலை அறிக்கை மூலமாக 1,94,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 77,499 வேளாண் இயந்திரங்கள் கருவிகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி அடைந்திட 'கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்' செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை 707 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக 61 லட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளார்கள். இதனால்தான் பாசனப் பரப்பு அதிகம் ஆனது. உற்பத்தியும் அதிகம் ஆனது.

6 ஆயிரத்து 48 ஏக்கர் தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்களும், 52 ஆயிரத்து 664 ஏக்கர் தரிசு நிலங்களில் குறுகிய கால வேளாண் பயிர்களும் என மொத்தம் 58 ஆயிரத்து 712 ஏக்கர் தரிசுநிலங்கள் தற்போது சாகுபடி செய்யப்பட்டு, விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதுதான் இந்த அரசின் மகத்தான சாதனை ஆகும். 41 ஆயிரத்து 804 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகளின் தரிசு நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி, சமன்செய்து, உழுது சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதாவது மண்ணும் செழித்துள்ளது. மக்களும் மகிழ்ந்துள்ளார்கள்.

'முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டத்தின் மூலமாக 21 லட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளார்கள். தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 21 இலட்சம் பழச்செடி தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2,115 ஆதிதிராவிட பழங்குடியின விவசாயிகளுக்கு சாகுபடிக்காக ஆழ்துளை, குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. 10,588 சிறுபாசனக் குளங்கள், வரத்துக்கால்வாய்கள், நீர்சேமிப்புக் கட்டுமானங்கள் தூர்வாரி மேம்படுத்தப் பட்டுள்ளன.

நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் கோவையில் உருவாக்கப்பட்டுள்ளது. நெல் ஜெயராமன் பெயரில் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**குறுவை சாகுபடியை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணை உரிய தேதியில் ஜூன் 12 அன்று திறந்துவிடப்பட்டது. டெல்டா விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுவைச் சிறப்புத் தொகுப்பு மூலமாக 19.51 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.**

முதன்முதலாக டெல்டா அல்லாத மாவட்டங்களில் சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக 12.48 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டை விட 3 லட்சம் ஏக்கர் கூடுதல் சாகுபடி ஆகியது.

இளையோரை வேளாண் தொழில் முனைவோர் ஆக்குதல் திட்டப்படி 456 பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்க ஊக்குவிக்கப்பட்டது. ஆயிரம் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**பயிர் உற்பத்தித்திறனில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் முதலிடம். மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பில் இரண்டாம் இடம். குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலையில் மூன்றாம் இடம் என்ற அளவில் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு.**

14 புதிய உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த 125 உழவர் சந்தைகளில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. மாநகராட்சிப் பகுதிகளில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகள் செயல்படுகிறது. மாவட்டத்திற்கு ஒரு உழவர் சந்தை வீதம் 37 மாவட்டங்களில் மாலை நேரங்களில் உழவர் சந்தைகளும் இயங்கி வருகின்றன.

விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் கடந்த நான்கு ஆண்டுகளில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக,1.630 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனை 21இலட்சம் விவசாயிகள் பெற்றுள்ளார்கள். பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில், இழப்பீட்டுத் தொகையாக 5 ஆயிரத்து 720 கோடி ரூபாய் 32 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நெல்லுக்கு வழங்கப்பட்ட மாநில அரசின் ஊக்கத் தொகையையும் உயர்த்தி வழங்கி வருகிறது. 2025-26 ஆம் ஆண்டிற்கு, நெல்லுக்கு ஒன்றிய அரசு அறிவித்த குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் தமிழ்நாடு அரசு குவிண்டால் ஒன்றிற்கு 2,500 ரூபாயினை விவசாயிகள் குறைந்தபட்சம் பெறும் வகையில் தற்போது சாதாரண ரகத்திற்கு 131 ரூபாயும் சன்ன இரகத்திற்கு 156 ரூபாயும் உயர்த்தி வழங்கியுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.349/- சிறப்பு ஊக்கத்தொகையாக அறிவிக்கப்பட்டு ரூ.297 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி, தமிழ்நாட்டில் கரும்பு விலை மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ. 3.500/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**இவை அனைத்துக்கும் மேலாக, பருவம் தப்பாமல் மழை பெய்தது. தண்ணீர் பஞ்சம் இல்லை. உழவர்கள் நிலத்திலேயே இருந்தார்கள், சாலைக்கு வரவில்லை. அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஐந்தாண்டு காலம் நல்ல காலம். இனி வரும் காலமும் அதுபோலவே அமையும்!**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2026) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில், மு.க. முத்து அவர்களின் பேத்தியும், அறிவுநிதி – திருமதி பூங்கொடி தம்பதியரின் மகளுமான மாதுல்யா நிதி – டாக்டர் சாய் ராம் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் ஒன்றிய முன்னாள் அமைச்சர் மு.க. அழகிரி, மு.க. தமிழரசு, திருமதி. மல்லிகா மாறன், திருமதி. செல்வி செல்வம், திருமதி. துர்கா ஸ்டாலின், மோகனா தமிழரசு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைதான

# அனைத்து இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, பிப். 20 - இலங்கை காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களும் தாயகம் திரும்புவதற்கும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கும் உடனடி தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு :-

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களும் தாயகம் திரும்புவதற்கும், இலங்கைக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கும் உடனடி தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (19.02.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 22 மீனவர்களும் அவர்களது நான்கு மீன்பிடிப் படகுகளும் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டது குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள முதல மைச்சர் அவர்கள், 18.02.2026 அன்று ராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 மீனவர்கள் மற்றும் அவர்களது மூன்று மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்பட்டதையும், அதே நாளில் நடந்த மற்றொரு சம்பவத்தில், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவ சமூகத்தின் வாழ்க்கையும் வாழ்வாதாரமும் கடலையே நம்பியுள்ளதால் இலங்கை அதிகாரிகளால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களது குடும்பத்தினரிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் இன்றைய நிலவரப்படி 104 மீனவர்களும் 258 படகுகளும் இலங்கை காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், பிப்ரவரி முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 12 மீனவர்கள் தாயகம் திரும்புவதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுவது, அவர்களின் குடும்பங்களை நிச்சயமற்ற சூழலிலும் பொருளாதார நெருக்கடியிலும் ஆழ்த்தியுள்ளது என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, இலங்கை காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களும் தாயகம் திரும்புவதற்கும், தற்போது கைது செய்யப்பட்டு அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கும் உடனடி தூதரக நடவடிக்கைகளை எடுக்கவும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 'டெட்' தேர்வு அமலுக்கு வருவதற்கு முன்பே

# நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர விலக்கு அளிக்க வேண்டும்!

## மக்களவையில் தே.மலையரசன் கோரிக்கை!

*புதுடெல்லி, பிப்.20 - 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் (ஆர் டி இ) சட்டம் அமல்படுத்தப்பட்டது தொடர்பான தீவிரமான மற்றும் நீண்ட கால பிரச்சனைகள் குறித்து, தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதி தேர்வு (டி இ டி) அறிமுகப்படுத்துவதற்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்துகள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் பேசினார். அவர் பேசியதாவது:*

*ஆர்.டி.இ. சட்டம் தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 23, 2010ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது அதைத் தொடர்ந்து ஆசிரியர் தகுதித் தேர்வு டி.இ.டி. ஒரு கட்டாய தகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் டெட் தேர்வு அமல்படுத்துவதற்கு முன்பே அப்போதைய விதிமுறைகளை பின்பற்றி பெரும் அளவிலான ஆசிரியர்கள் சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தனர். இருந்த போதிலும் பின்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அத்தகைய ஆசிரியர்களை பின்னோக்கிச் சென்று டெட் தேர்வில் தகுதி பெற வேண்டும் என்ற கட்டாயப் படுத்தினர். இது கடுமையான வேலை பாதுகாப்பு இன்மை, மத்திய அரசு மற்றும் கல்வி அமைச்சகத்தை நான் பின்வருமாறு கேட்டுக்கொள்கிறேன் அமலுக்கு வருவதற்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு டெட் தேர்வில் இருந்து 6 நிரந்தர விலக்கு அளிக்க வேண்டும். அத்தகைய ஆசிரியர்களின் பணி ஊதியம், பதவி உயர்வுகள் மற்றும் ஓய்வூதிய பலன்கள் பாதுகாக்க வேண்டும். பாகுபாடுகளையும் நீண்டகால வாய்ப்புகளை தவிர்ப்பதற்காக ஒரு தெளிவான மற்றும் சீரான தேசியக் கொள்கையை வெளியிட வேண்டும்.*

*இவ்வாறு அவர் கோரிக்கை வைத்துள்ளார்.*



### வெல்லும் தமிழ்ப் பெண்கள் தீவிர பரப்புரை -

# முதல்வர் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## நெல்லை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமை!

*நெல்லை, பிப். 20 - நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.*

*இந்தக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஏழை,எளிய மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும், நாளை 21 ஆம் தேதி மதுரையில் நடைபெறும் கூட்டத்தில் பாக முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், வாக்குச்சாவடி நிலைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் எனவும், வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை மேற்கொள்வது குறித்தும், கழக வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.*

*நிகழ்வில் முன்னாள் எம்.பி. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.ஞான திரவியம், இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சிவராஜ், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல், நம்பி, முத்துராமலிங்கம், ஹரிகிருஷ்ணன், சந்திரகலா, அனுராதா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ அய்யப்பன், கனகராஜ், ஒன்றிய செயலாளர்கள் போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன்,பி.சி.ராஜன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின், எரிக்ஜூட், சேவியர் செல்வராஜா, சுபாஷ் தங்க பாண்டியன், களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், பேரூர் கழகச் செயலாளர்கள் ஜான் கென்னடி,*

*வானுமாமலை, அயூப் கான், முருகையா, கசமுத்து மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் கள் ஜான்ரபீந்தர், மல்லிகாஅருள், மாடசாமி, பிரேமா, பொட்டைகுளம் முருகன், எஸ்.என்.முருகன், சகாய பிரபு, அழகுமுத்து, மனோஜ்குமார், அருள்ராஜ், தில்லை ராஜா உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.*




வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மேலூரில் நடைபெற்ற அரசு விழாவில் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். தொடர்ந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் விடுதியில் தங்கி பயிலும் மாணவ – மாணவிகளுக்கு ரூபாய் ஐந்து லட்சத்திற்கான காப்பீட்டு அட்டையினை வழங்கி டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில்மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் உள்ளிட்ட அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பயனாளிகள் பங்கேற்றனர்.